Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/18.12.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 18.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மஸ்கட்டில் ஓமன் சுல்தானுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே, **பொருளாதார கூட்டாண்மை உடன்பாடு** கையெழுத்தாகி உள்ளது.

**விக்சித் பாரத்-ஜி ராம் ஜி** ஊரக வேலை உத்தரவாத மசோதா, மக்களவையில், இன்று நிறைவேற்றப்பட்டது.

2029-ஆம் ஆண்டிற்குள் பாதுகாப்பு உற்பத்தியை 2 மடங்காக உயர்த்தும் நோக்குடன், இந்தியா செயல்பட்டு வருவதாக, மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார்.

புதுச்சேரியில், முன்னாள் முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார் பிறந்த நாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது.

மோடி-ஓமன்

பிரதமர் திரு நரேந்திர மோடி ஓமன் தலைநகர் மஸ்கட்டில் சுல்தான் **ஹைறத்தம் பின் தாரிக்**கை அவரது அரண்மனையில் சந்தித்து பரஸ்பர அக்கறை உள்ள பல்வேறு பிரச்சனைகள் குறித்தும் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் விவாதித்தார். தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே, விரிவான பொருளாதார கூட்டாண்மை உடன்பாடு கையெழுத்தாயிற்று. மத்திய தொழில்-வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல், ஓமன் நாட்டின் தொழில்-வர்த்தக அமைச்சர் கைஸ் அல் யூசப் ஆகியோர் உடன் பாட்டில் கையெழுத்திட்டனர். பிரதமரின் ஓமன் பயணம் குறித்து, ஒரு செய்தி தொகுப்பு ……..

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று மஸ்கட்டில், இந்திய சமூகத்தினர் மற்றும் மாணவர்களின் **நட்பு திருவிழா**வில் பேசுகையில், இந்தியாவின் கலாச்சாரத்திற்கு, பன்முகத் தன்மை தான் அடிப்படை என்றும், இந்தியர்கள் எங்கு வாழ்ந்தாலும், பன்முகத் தன்மையை மதிப்பது, சிறப்பானது என்றும் கூறினார். ஓமனில், இந்தியாவின் **பள்ளிக் கல்வி முறை**, 50 ஆண்டுகளாக அமலாகி வருவதை குறிக்கும் வகையில் இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அதற்கும் மேல், இந்தியாவின் கடல்சார் பாரம்பரியம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, நம்பிக்கை, தொழில் நுட்பம், புதுமையாக்கம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களையும் இவ்விழா குறிப்பதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

முன்னதாக, இந்தியா-ஓமன் வர்த்தக தலைவர்களின் உச்சி மாநாட்டில் பிரதமர் பேசுகையில், இந்தியாவின் **அரபிக் கடல்வழிப் பயண மரபுக**ளையே இன்று வரை, இருநாட்டு வணிகர்களும் பின்பற்றுவதாக கூறினார். காலம் மாறினாலும் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள், மேலும், மேலும் வலுவடைந்து கொண்டு தான் இருப்பதாக அவர் கூறினார். இந்தியாவிற்கும்-ஓமனுக்கும் இடையிலான **தூதரக உறவு**கள், 70 ஆண்டுகளை எட்டி உள்ள நிலையில், பொதுவான மரபுகளின் அடிப்படையில், இருநாடுகளும் இணைந்து, வளமான எதிர்காலம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே, இந்தியாவின் விருப்பம் என்று அவர் குறிப்பிட்டார்.

*ஜி ராம் ஜி*

**விக்சித் பாரத்-ஜி ராம் ஜி** ஊரக வேலை உத்தரவாத மசோதா, மக்களவையில், இன்று நிறைவேற்றப்பட்டது. **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்**திற்கு மாற்றாக கொண்டு வரப்பட்டுள்ள இம்மசோதாவின் கீழ், கிராமப்புறக் குடும்பங்களுக்கு, **ஆண்டுக்கு தலா 125 நாள்** வேலை வழங்க, சட்டப் பூர்வமாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. திட்டத்திற்கான நிதியை மத்திய மாநில அரசுகள் பகிர்ந்து கொள்ளவும், **ஜி ராம் ஜி மசோதா**வில் வகை செய்யப்பட்டுள்ளது. வடகிழக்கு மற்றும் **இமயமலைப் பகுதி** மாநிலங்களில் மத்திய-மாநில அரசுகளுக்கு இடையிலான **நிதிப் பகிர்வு**, 90க்கு-10 **சதவிகித**மாகவும், இதர மாநிலங்களில், 60க்கு 40 **சதவிகித**மாகவும் இருக்கும். மசோதா நிறைவேற்றப்பட்டது குறித்து கூடுதல் விவரங்கள் ……

**(வாய்ஸ்)**

மக்களவையில், **விக்சித் பாரத்-ஜி ராம் ஜி** மீதான விவாதங்களுக்கு, மத்திய **ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான்** பதில் அளிக்கையில், முந்தைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு, **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்**திற்கு 2 லட்சத்து 13 கோடி ரூபாய் மட்டுமே செலவிட்ட நிலையில்,

நரேந்திர மோடி அரசு இத்திட்டத்திற்கு, 8 லட்சத்து 53 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டுள்ளதாக கூறினார். திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட **மொத்த வேலை நாட்கள்**, மற்றும்,பெண்களுக்கு வழங்கப்பட்ட வேலை நாட்களின் எண்ணிக்கையும், நடப்பு ஆட்சியில் அதிகரித்து இருப்பதாக, அவர் தெரிவித்தார்.

காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக் காலத்தில், திட்டங்கள், கல்வி நிலையங்கள், கட்டிடங்கள் மற்றும் சாலைகளுக்கு, நேரு, இந்திரா மற்றும் ராஜீவ் காந்தியின் **பெயர்தான்** சூட்டப்பட்டதாகவும், இது, மகாத்மா காந்தியின் கொள்கைகளுக்கு, காங்கிரஸ் **இழைத்த துரோகம்** என்றும் திரு சவ்கான் குறிப்பிட்டார். **தேசிய ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டத்**தில், முந்தைய ஆட்சியின் போது இருந்த **ஊழல்**களை முற்றிலுமாக தடுத்து, வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கவே, புதிய மசோதா கொண்டு வரப்பட்டுள்ளதாக, அவர் மேலும் கூறினார். காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகளின் அமளிக்கு இடையிலேயே, அமைச்சர், அவையில் பதில் உரையாற்றினார். மசோதா நிறைவேற்றப் பட்டதைத் தொடர்ந்து, மக்களவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப் பட்டன.

*சிற்பி-இரங்கல்*

உத்தரபிரதேச மாநிலம் நோய்டாவில் நேற்று இரவு காலமான பத்ம பூஷண் விருது பெற்ற முதுபெரும் சிற்பக் கலைஞர் **ராம் சுதர்** மறைவு குறித்து, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் துயரம் வெளியிட்டுள்ளனர். சிற்பி **ராம் சுதர்** வடித்த அபாரமான சிற்பங்கள், நாட்டின் கலை-கலாச்சார மரபுகளுக்கு, பெருமளவில் பலம் சேர்த்து இருப்பதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் குடியரசு தலைவர் கூறி உள்ளார். குறிப்பாக **ராம் சுதர்** கை வண்ணத்தில் உருவான, பிரம்மாண்டமான ஒற்றுமை சிலை, இந்தியாவின் நிலைத்த புகழுக்கு சாட்சியாகவே நிற்பதாக அவர் தெரிவித்துள்ளார். சிற்பி ராம் சுதரின் கலைப் படைப்புகள், இந்தியாவின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் ஒட்டு மொத்த இந்திய உணர்வின் வெளிப்பாடாகவே திகழ்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். கலைஞர்கள் மட்டுமின்றி நாட்டு மக்கள் அனைவருமே, ராம் சுதரின் கலைப் பணிகளால், தொடர்ந்து உணர்வூக்கம் பெறுவார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

*பாதுகாப்பு உற்பத்தி*

2029-ஆம் ஆண்டிற்குள் பாதுகாப்பு உற்பத்தியை 3 லட்சம் கோடி ரூபாயாக, 2 மடங்கு உயர்த்தும் நோக்குடன், இந்தியா செயல்பட்டு வருவதாக, மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில், செய்தியாளர் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், நாட்டின் பாதுகாப்பு உற்பத்தி துறை, ஏற்கனவே, குறிப்பிடத் தகுந்த அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக கூறினார். அடுத்த 4 ஆண்டுகளில் இந்தியாவின் பாதுகாப்பு ஏற்றுமதியும், 50 ஆயிரம் கோடி ரூபாயாக, 2 மடங்கு

அதிகரிக்கும் என்றும் இதனால், உலக அளவிலான பாதுகாப்பு அரங்கில் இந்தியாவின் தலைமைத் துவம் மேம்படும் என்றும் அவர் தெரிவித்தார். பாதுகாப்புத் துறையில் நாட்டின் இதர சாதனைகள் குறித்து அமைச்சர் பேசுகையில், புதிய தொழில் நுட்பங்கள், புதிய விதிமுறைகள், மற்றும், சிறு-குறு-நடுத்தர தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பங்கேற்புடன் பாதுகாப்பு துறையில் சுயசார்பை எட்டும் பாதையில், இந்தியா பயணித்து வருவதாக கூறினார்.

*ராஜ்நாத்*

விரைவுத் தாக்குதல் மூலம் அதிக தாக்கம் ஏற்படுத்துவதில் இந்தியாவின் திறன்களை ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை உலகிற்கு வெளிப்படுத்தி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் விமானப்படை கமாண்டர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது கற்ற பாடங்களை, பாதுகாப்பு படையினர், எதிர்கால சவால்களுக்கும் பயன்படுத்த வேண்டும் என்றார். தீவிரவாத முகாம்களை துரிதமாக தாக்கி அழித்ததற்கு அப்பாற்பட்டு, பாகிஸ்தானின் பொறுப்பற்ற பதிலடி முயற்சிகளையும் இந்திய விமானப் படையினர் திறம்பட்ட முறையில் முறியடித்ததை பாராட்டினார்.

*மாவோயிஸ்ட்*

சட்டீஸ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்திற்கு உட்பட்ட சிங்கனமருகு வனப்பகுதியில் இன்று, 3 மாவோயிஸ்டுகள், பாதுகாப்பு படையினர் உடனான மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். கிஸ்தாராம் பகுதியில் தீவிரவாதிகளின் நடமாட்டம் இருப்பதாக உளவு தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து மாவட்ட ரிசர்வ் போலீஸ் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்ட போது இந்த மோதல் ஏற்பட்டது. சம்பவ இடத்தில் இருந்து 3 மாவோயிஸ்டுகளின் உடல்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. கூடுதல் படையினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டு, தேடுதல் வேட்டை தீவிரமாக்கப் பட்டுள்ளது.

*புதுச்சேரி-ரெட்டியார்*

புதுச்சேரியில், முன்னாள் முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார் பிறந்த நாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய் சரவணன் குமார், திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு லட்சுமி காந்தன் ஆகியோர், வெங்கடா சுப்பா ரெட்டியார் சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*மாற்றுத் திறனாளிகள்*

புதுச்சேரியில், இம்மாதம் 3-ஆம் தேதி நடைபெறுவதாக இருந்து, மழையினால் ஒத்தி வைக்கப்பட்ட, சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின விழா, வரும் 23-ஆம் தேதி நடைபெற உள்ளது. துணை நிலை ஆளுநர், முதலமைச்சர், சட்டப் பேரவைத் தலைவர், மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் பங்கேற்புடன் நடைபெற உள்ள இவ்விழாவில், மாற்றுத் திறனாளிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும், சமூக நலத் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

*போட்டித் தேர்வு*

புதுச்சேரியில், அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வில் கலந்து கொள்பவர்களுக்கு, தொழிலாளர் துறை வேலை வாய்ப்பகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இலவச பயிற்சி வகுப்பு, விரைவில் தொடங்க உள்ளது. விருப்பமுள்ள தேர்வர்கள், Labour.py.gov.in என்ற இணையதளம் மூலம், வரும் 28-ஆம் தேதிக்குள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி -காங்கிரஸ்*

புதுச்சேரியில் தயாரிக்கப்பட்ட போலி மருந்துகள் 16 மாநிலங்களில் விற்கப்பட்டதால்தான், காங்கிரஸ், சிபிஐ விசாரணை கோருவதாக, முன்னாள் முதலமைச்சர் திரு வி நாராயணசாமி கூறி உள்ளார். இன்று புதுச்சேரியில் செய்தியாளரிடம் பேசிய அவர் சம்பந்தப்பட்ட மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு 2017-ஆம் ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்டதாக கூறப்படுகின்ற போதிலும், அனுமதி தொடர்பான கோப்புக்கள் முதலமைச்சருக்கு வராது என்றும், ஆயினும், விசாரணைக்கு தாம் தயாராகவே இருப்பதாகவும் கூறினார். உத்தரபிரதேச அரசின் முன் முயற்சி மூலமாகத்தான் போலி மருந்து பிரச்சனையில் நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, புதுச்சேரி அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கல்லை என, அவர் குற்றம் சாட்டினார்.

பிரதேச காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு வைத்திலிங்கம் இந்த செய்தியாளர் கூட்டத்தில் பேசுகையில் போலி மருந்து விவகாரத்தில் பாரதிய ஜனதாவின் தலையீடு இருப்பதாகவும், திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தமது பெயரை அவர்கள் இழுப்பதற்கு, பிரச்சனையை திசை திருப்பும் நோக்கமே காரணம் என்றும் கூறினார்.

*வானிலை*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, இன்று தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை ஓரிரு இடங்களில், அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24

மணி நேரத்தில் அதிகபட்சமாக, நெல்லை மாவட்டம், ஊத்து, நாலுமுக்கு ஆகிய இடங்களில் தலா 14 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*செயற்கை நுண்ணறிவு*

நவீன தொழில் நுட்பங்களை அனைவரும் அணுக ஏதுவாக, தொழில் நுட்பத்தை, ஜனநாயக மயமாக்குதல் அவசியம் என்று, மத்திய அரசின் தகவல் தொழில் நுட்பத் துறை செயலர் திரு எஸ் கிருஷ்ணன் கூறி உள்ளார். செயற்கை நுண்ணறிவின் தாக்கங்கள் குறித்து அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உச்சி மாநாட்டிற்கு முந்தைய நிகழ்வாக, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, **ஏஐ இண்டியா மாநாட்**டில் அவர் பேசுகையில், கணிப்பொறி அறிவியல் அல்லது தொழில் நுட்பம் பயிலும் மாணவர்கள் மட்டுமே, செயற்கை நுண்ணறிவு பயின்றால், போதுமானது அல்ல என்றார். ஆக்கப்பூர்வ நோக்கங்களுக்கு செயற்கை நுண்ணறிவை பயன்படுத்துவதில் வேகத்தை அதிகரிக்க வேண்டும் என்றும், உற்பத்தி, வேளாண்மை, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் தற்போதுள்ள குறைகளைப் போக்கி மேம்பட்ட சேவை வழங்க செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார். செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டினால் வேலை இழப்பு ஏற்படலாம் என்பதை விட, புதிய யுகத்தின் தேவைகளுக்கு ஏற்ற திறன் மேம்பாடு மற்றும் மறுதிறன் மேம்பாட்டிற்கே அதிக முக்கியத் துவம் அளிக்க வேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தினார்.

*நெதர்லாந்து*

நெதர்லாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு டேவிட் வான்-வீல், இன்று புதுடெல்லி வந்துள்ளார். இந்தியாவிற்கும்-நெதர்லாந்திற்கும் இடையிலான உறவுகளை மேலும் விஸ்தரிக்கும் வகையில், டெல்லி மற்றும் மும்பையில் பல்வெறு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்க உள்ளதாக, வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு ரண்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

*மாநிலங்களவை மசோதா*

மக்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்ட, **ஷாந்தி மசோதா** என்னும், **அணுசக்தி மேம்பாட்டு மசோதா** இன்று மாநிலங்களவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏற்கனவே உள்ள அணு சக்தி சட்டம், மற்றும், அணுசக்தியால் ஏற்படும் சேதங்களுக்கான சிவில் பொறுப்புணர்வு சட்டத்திற்கு மாற்றாக, இப்புதிய மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் நன்மைக்கான, மின்சார உற்பத்திக்காக, கதிரியக்கம் மற்றும் அணுசக்தியின் பயன்பாட்டை மேம்படுத்தவும், அணுசக்தியின் பயன்பாட்டில் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், இம்மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மஸ்கட்டில் ஓமன் சுல்தானுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே, **பொருளாதார கூட்டாண்மை உடன்பாடு** கையெழுத்தாகி உள்ளது.

**விக்சித் பாரத்-ஜி ராம் ஜி** ஊரக வேலை உத்தரவாத மசோதா, மக்களவையில், இன்று நிறைவேற்றப்பட்டது.

2029-ஆம் ஆண்டிற்குள் பாதுகாப்பு உற்பத்தியை 2 மடங்காக உயர்த்தும் நோக்குடன், இந்தியா செயல்பட்டு வருவதாக, மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார்.

புதுச்சேரியில், முன்னாள் முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார் பிறந்த நாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மஸ்கட்டில் ஓமன் சுல்தானுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து இருநாடுகளுக்கும் இடையே, **பொருளாதார கூட்டாண்மை உடன்பாடு** கையெழுத்தாகி உள்ளது.

**விக்சித் பாரத்-ஜி ராம் ஜி** ஊரக வேலை உத்தரவாத மசோதா, மக்களவையில், இன்று நிறைவேற்றப்பட்டது.

2029-ஆம் ஆண்டிற்குள் பாதுகாப்பு உற்பத்தியை 2 மடங்காக உயர்த்தும் நோக்குடன், இந்தியா செயல்பட்டு வருவதாக, மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார்.

புதுச்சேரியில், முன்னாள் முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார் பிறந்த நாள், அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/18.12.2025/Script.

---------------------------